## 7. யாரையும் மதிக்க வேண்டும்.

ஒரு காட்டில் பெரிய மலைப்பாறை ஒன்று இருந்தது.
அதில் ஒரு குகை இருந்தது.
குகைக்குள் பெரிய சிங்கம் ஒன்று வாழ்ந்தது.
சிங்கம் தான் காட்டுக்கு ராஜா.
அதற்குத் தன் குகைக்குள் யாரும் வரவே கூடாது.
ஆனால் ஒரு சுண்டெலி எப்போதும் அந்த குகைக்குள் புகுந்து விளையாடும்.
சில சமயம் சிங்கம் நன்றாக உறங்கும்.
அப்போது எலியில் வால் சிங்கத்தின் மேல் படும்படி கூட எலி ஓடி ஆடி விளையாடும்.
எலியை சிங்கம் வெறுத்தது.
அப்போது எலி சொன்னது,
"சிங்க ராஜா! காட்டில் உள்ள பல பெரிய பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் பயந்து தான் உங்கள் குகைக்குள் இருக்கிறேன்.
உங்களை மீறி யார் வந்து என்னைத் தொந்தரவு செய்ய முடியும்?" என்று பரிதாபமாகக் கேட்டது.
சிங்கமும் எலியைத் தன் குகைக்குள் ஏற்றுக் கொண்டது.
ஒரு நாள் இரவு ஆகியும் சிங்கம் குகைக்குள் வரவே இல்லை.
இதனால் எலி மிகவும் கவலைப் பட்டது.
பயந்து பயந்து இருட்டில் காட்டுக்குள் சென்று சிங்கத்தைத் தேடியது.
பாவம் ஒரு வேடன் விரித்த வலையில் மாட்டிக் கொண்டு சிங்கம் தவித்ததை எலி கண்டது.
உடனே சற்றும் யோசிக்காமல் தன் கூர்மையான பற்களால் வலையை அறுத்து சிங்கத்தை விடுவித்தது.
"சிங்க ராஜா! என்னை குகைக்குள் இருக்க விட்டு நீங்கள் காப்பற்றும் போது, நான் உங்களுக்கு செய்த உதவி இதுவே! மிக்க நன்றி!" என்று கூறியதைக் கேட்ட சிங்கம் மகிழ்ச்சி கொண்டது.
இருவரும் ஒற்றுமையாக வாழ்ந்தன.